மாண்புமிகு திரு. எம். சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

புது தில்லி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழிருக்கை நிறுவ நல்கைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியின் வளர்ச்சியில் என் தலைமையில் அமைந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. எந்த வகையில் எல்லாம் தமிழுக்கு சிறப்புச் செய்ய முடியுமோ, அந்த வகையில் எல்லாம் தமிழை வளர்க்க உறுதி பூண்டிருக்கிறது இந்த அரசு. இவ்வரசின் "இன்றும் தமிழ் என்றும் தமிழ்" என்ற குறிக்கோளுக்கிணங்க, தமிழ் மொழியின் பயன்பாட்டை விரிவாக்கவும், மேம்படுத்தவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு எடுத்து வருகின்றது.

முற்பகல் 11-35

ஆட்சி மொழித் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்த உறுதி பூண்டுள்ள இவ்வரசு, மைய அரசின் ஆட்சி மொழிகளுள் தமிழ் மொழியையும் ஒன்றாக அறிவிக்கவும், தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவிக்கவும் வேண்டுமென்று மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக, அனைத்து சாத்திய முறைகளிலும் தமிழ் மொழியினைச் செம்மைப்படுத்தவும், மேம்படுத்தவும் இவ்வரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அவ்வகையில், மற்ற மாநிலப் பல்கலைக்கழகங்களில் தமிழிருக்கைகள் தோற்றுவிக்க நல்கைகள் வழங்கப்படுகின்றன. மேலும் தற்போது இயங்கி வரும் உலகத்

2003 ஏப்ரல் 21] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மூலம், உலகில் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழியல் துறைகளுடன் இணைந்து தமிழாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நல்கைகள் வழங்கப்படுகின்றன.

இந்தியத் தலைநகரில் உள்ள புகழ்மிக்க ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக தமிழிருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்தில்கொண்டு, ஐம்பது இலட்சம் ரூபாய், ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக ஒரே தவணையில் வழங்க One time lumpsum grant- ஆக வழங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்தில், இது தொடர்பாக சில செய்திகளை இந்தப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன். புது தில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில், தமிழிருக்கை நிறுவுவதற்கு நல்கை வழங்குமாறு, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவரின் 15-3-2000 நாளிட்ட கடிதம் வாயிலாக வேண்டுகோள் வரப்பெற்றது. தி.மு.க. ஆட்சியின்போது, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது சட்டமன்றப் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவப்பெறும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, அரசாணை எண் 137, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, நாள்: 9-6-2000-ல் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவுவதற்கு 10 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பெற்றது. ஆனால் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் தமிழிருக்கை நிறுவுவதற்கு 50 இலட்சம் ரூபாய், ஒரே தவணையில் வழங்கப்பட வேண்டும் அல்லது ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம், 5 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று 4-7-2000 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிட்டு, தொகையைத் திருப்பி அனுப்பிவிட்டது. அதற்குப் பிறகு, இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் தி.மு.க. அரசால் எடுக்கப்படவில்லை. ஏனென்றால், தமிழ் வளர்ச்சியில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை.

24-9-2001 நாளிட்ட கடிதத்தில், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலிருந்து என்னுடைய தலைமையிலான அரசுக்கு வேண்டுகோள் வரப்பெற்றது. உடனடியாக, எனது அரசு இதுகுறித்து நடவடிக்கை எடுத்து, இந்தியத் தலைநகரில் உள்ள புகழ்மிக்க ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைக் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்காக தமிழிருக்கை நிறுவப்படுவதன் இன்றியமையாமையையும், தேவையையும் கருத்திற் கொண்டு, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழிருக்கை நிறுவுவதற்கு *50* இலட்சம் ரூபாய், ஒட்டுமொத்த நல்கைத் தொகையாக, ஒரே தவணையில் வழங்குவதற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் வளர்ச்சி என்பது வார்த்தை அளவில் மட்டுமல்லாமல், ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என்பதே எனது இலட்சியமாகும். தி.மு.க. அரசு எடுத்த அரைகுறை நடவடிக்கைகளையும், அதையும் முழுமையாகச் செய்யாமல் விட்டுவிட்டதையும், இந்த நேரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருவதுடன், ஆக்கபூர்வமான தமிழ் வளர்ச்சிப் பணிகளை ஆற்றுவதில் எவரைக் காட்டிலும் இந்த அரசே முன் நிற்கிறது என்ற உண்மையை இந்த அவைக்கும், அதன் மூலம் தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவையின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *45* - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.